**<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>**

MCOP.No.842/2010 Date:23.09.2021

Name:செந்தில்ராதா(PW1)

**<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் பயணம் செய்த கார் என் கணவர் சேகர் என்பவருக்கு சொந்தமானது என்றால், சரிதான். என் கணவர் சேகர் 2 ம் எதிர்மனுதாரராக காண்பிக்கப்பட்டுள்ளார் என்றால், சரிதான். நான் பயணம் செய்த என் கணவரின் காருக்கான காப்பீட்டு சான்றிதழ் என்னிடம் காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். அது 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த விபத்திற்கு காரணம் டிராக்டரின் டிரைவர் தான் என்றால், சரியல்ல. எங்கள் வாகன ஓட்டுநர் ராஜா தான் காரணம். நான் தாக்கல் செய்த ம.சா.ஆ-1 முதல் தகவல் அறிக்கையிலேயே டிராக்டர் ஓட்டுநர் தான் குற்றவாளியாக காண்பிக்கப்பட்டுள்ளார் என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் தான் நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். விபத்தின் போது நான் பயணம் செய்த வாகனத்திற்குரிய காப்பீடு Liability Policy என்பதாலும், விபத்தின் போது வாகனத்தில் பயணம் செய்த நாங்கள் 3 ம் எதிர்மனுதாரரை பொறுத்து 3 ம் நபர் அல்ல என்பதாலும், 3 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றால், சரியல்ல.

Sd/-Senthilradha, Sd/-S.Uma Maheswari,

Sub Judge, Sankari.